**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 321/2019 |
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | சகுந்தலா |
| Father/Husband Name | : | தங்கவேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 60 |
| Occupation | : | |

**Accused Absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.02.2023.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது சுக்கமநாயக்கன்பட்டி நரிக்குரவர் காலணியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக, தேதி மாதம் ஞாபகம் இல்லை, நானும் எனது கணவர் தங்கவேலுவும் டீ குடிப்பதற்காக சென்றுவிட்டு ஊத்துக்குளி ரோட்டில் காலை 11.00 – 12.00 மணியளவில் நடந்து வந்து கொண்டிருந்தோம். என் கணவர் எனக்கு முன்னால் தார் சாலையில் ஓரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது எங்களுக்கு எதிரே வந்த டெம்போ வாகனம் வேகமாக வந்து எனது கணவர் மீது மோதியது.

2. நான் ஓடி சென்று பார்த்தேன். என் கணவருக்கு தலையிலும், காலிலும் அடிபட்டு இருந்தது. அங்கு வந்த ஆம்புலன்ஸில் என் கணவரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். என் கணவர் 12.00 மணியளவில் இறந்துவிட்டார். நான் நேராக ஊத்துக்குளி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

web copy

போலிசார் என்னை விசாரித்தனர். விபத்து ஏற்பட்டு 6 வருடங்கள் ஆனதால் டெம்போ வாகனத்தை ஓட்டிய நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் காண்பிக்க இயலாது.

**குறுக்கு விசரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியாது. சம்பவத்தன்று எனது கணவர் வேலைக்கு சென்றாரா என்றால் சென்றார். சம்பவத்தன்று நான் வேலைக்கு சென்றேனா என்றால் வேலைக்கு செல்லவில்லை, எனது கணவருக்கு உணவு கொடுத்துவிட்டு டீ குடிப்பதற்காக ஒன்றாக சென்று வந்தபோது தான் விபத்து ஏற்பட்டது. அசாஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் போலிசார் எழுதினர்.

2. சம்பவம் பற்றி என்னிடம் கேட்டு போலிசார் எழுதிகொண்டார்களா என்றால் எழுதிகொண்டார்கள். சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறுதவற்தகாக எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் என் கணவருடன் செல்லவில்லை என்றாலும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. போக்குவரத்து விதிகளை மீறி சாலையில் நடந்து எனது கணவர் விபத்தை தாமாக தேடிக்கொண்டார் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2023.02.09 18:47:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

Web copy

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 321/2019 |
| Deposition of Witness | : | PW-2 |
| Name | : | பன்னீர்செல்வம் |
| Father/Husband Name | : | கருப்புசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 44 |
| Occupation | : | |

**Accused Absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.02.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது குளத்துபாளையத்தில் வசித்து வருகிறேன். கான்ட்ராக்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.07.2016 ம் தேதி குளத்துபாளையத்தில் உள்ள நைசில் கம்பெனியில் நான் பணியில் இருந்தேன். நான் டீ குடிப்பதற்காக காலை 10.30 மணிக்கு மேல் கம்பெனிக்கு அருகில் உள்ள டீ கடைக்கு வந்து டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது தங்கவேல் என்பவரும் அவரது மனைவியும் ஊத்துக்குளி சாலையில் மேற்கு நோக்கி மண்ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது எதிரே திருப்பூரில் இருந்து கிழக்கு நோக்கி வந்த 7443 என்ற பதிவு எண் கொண்ட சரக்கு ஆட்டோ ஒன்று வேகமாக வந்து தங்கவேலுவை நோக்கி அதன் பாதையை மாற்றி கிராசாக வந்து இடித்தது.

2. விபத்தில் தங்கவேலுக்கு தலை மற்றும் காலில் அடிபட்டு காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தோர் தகவல் தெரிவித்ததின்பேரில் அங்கு வந்த ஆம்புலன்ஸில் அவரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து

web copy

சென்றனர். ஆம்புலன்சில் அசா1ம் உடன் சென்றார். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர். சம்பவத்தின் போது ஆட்டோவை ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை.

**குறுக்கு விசரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2023.02.09 18:47:37 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

web copy

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 321/2019 |
| Deposition of Witness | : | PW-3 |
| Name | : | சிலம்பரசன் |
| Father/Husband Name | : | குருசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 30 |
| Occupation | : | |

**Accused Absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.02.2023.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது வெள்ளியம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நைசில் கம்பெனியில் டெய்லராக வேலை செய்து வருகிறேன். கடந்த 22.07.2016 ம் தேதி குளத்துபாளையத்தில் உள்ள நைசில் கம்பெனியில் நான் பணியில் இருந்தேன். காலை 10.45 மணியளவில் கம்பெனியின் இடைவேளை நேரத்தில் நானும், அசா2 பன்னீரும் ராஜா ஹாலோ பிரிக்ஸ் அருகே ஒரு பேக்கரியில் டீ குடித்துகொண்டிருந்தோம். அப்போது 7443 என்ற பதிவு எண் கொண்ட அசோக் லைலாண்ட் தோஸ்த் வாகனம் ஒன்று அதிவேகமாக வந்து சாலையில் நடந்து சென்ற எங்கள் கம்பெனியில் காவலராக பணியாற்றும் தங்கவேல் மீது மோதிவிட்டது.

2. விபத்தில் தங்கவேலுக்கு தலை, கை மற்றும் காலில் அடிபட்டது. அருகில் இருந்தோர் தகவல் தெரிவித்ததின்பேரில் அங்கு வந்த ஆம்புலன்ஸில் அவரை பெரிச்சிபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

web copy

**<u>குறுக்கு விசரணை</u>**

1. ஊத்துக்குளி காவல் நிலையத்தில் என்னிடமும் சகுந்தலாவிடமும் போலிசார் சம்பவம் பற்றி விசாரித்து எழுதி கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான். நான் டீ குடித்த கடையின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ சாலையின் அகலம் எவ்வளவு என்றால் சுமார் 20 அடி இருக்கும். ஆம்புலன்ஸில் அசா2 உடன் சென்றாரா என்றால் சென்றார். நாங்கள் புகார் கொடுத்த பின்பு போலிசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் அசா1 ஐ அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

2. ஆட்டோவில் ஓட்டுனருடன் வேறு யாரேனும் வந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. ஆட்டோவில் என்ன லோடு இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த தங்கவேலுக்கு நஷ்ட ஈடு பெற்றுதரவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.போலிசார் என்னை விசாரித்தபோது வாகனத்தில் சரக்கிருந்த விபரத்தினை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன்.

**<u>நீதிமன்ற விசாரணை</u>**

கேள்வி : விபத்தின்போது வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரை பார்த்தால் அடையாளம் தெரியுமா?

பதில் : அவரது பெயர் பூவேந்திரன். அவரை பார்த்தால் அடையாளம் தெரியும். **(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை அவரது தரப்பில் குவிமுசபிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது அவரது அடையாளத்தை பொறுத்தவரையில் எந்த ஒரு ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2023.02.09 18:47:54 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

web copy

Web copy